**Starting time 10.53 A.M.**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 11/2025</u>**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S.Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 17.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பாபு Father's Name : கிஷ்டா ரெட்டி

Address : பஜனை கோயில் தெரு, பனவட்டம்பாடி கிராமம், சோளிங்கர் வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 56

**<u>கூடுதல் சாட்சியம் அளிக்க 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு கூடுதல் முதல் விசாரணை :</u>** நான் இவ்வழக்கில் 1–ம் பிரதிவாதி. 1, 2 பிரதிவாதிகள் தரப்பு 1–ம் சாட்சி. நான் என்னுடைய சாட்சியத்தை ஏற்கனவே நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து பி.வா.சா.ஆ–1 முதல் 31 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது கூடுதல் சாட்சியத்திற்காக வேண்டி, கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். தற்போது கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| பிவா.சா.ஆ32 | அ–பதிவேட்டின் உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ33 | சர்வே எண் 501 மற்றும் 502–க்கான புல வரைப்படத்தின் உண்மை நகல் |

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

1. எனது தகப்பனார் பெயர் கிஷ்டா ரெட்டி என்றால், சரிதான். தாவா சர்வே எண் 502–ன் மொத்த விஸ்தீரணம் 48 செண்ட் என்றால், சரிதான். அதில் 35 செண்ட் நிலத்தை வாதியின் தகப்பனார் கடந்த 14.06.1950 அன்று வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் வாங்கினார் என்றால், சரிதான். அந்த 35 செண்ட் சொத்தானது, மொத்த விஸ்தீரணம் 48 செண்டில் தெற்கு பக்கம் உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் தான் வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணத்தின் சான்று நகல் என்றால், சரிதான்.

2. வாதியின் தகப்பனார் அந்த 35 செண்ட் சொத்தை அனுபவித்து வந்து பின்பு காலமாகிவிட்டார் என்றால், சரிதான். வாதியின் தகப்பனாருக்கு, சின்னகுழந்தையம்மாள் என்ற மனைவியும், மகனான வாதியும், மணியம்மாள் என்ற மகளும் வாரிசுகள் என்றால், சரிதான். வாதியின் தாயார் வழக்கிற்கு பின்னிட்டு சமீபத்தில் தான் காலமானார் என்றால், சரிதான்.

3. வாதியின் தகப்பனாரின் காலத்திற்கு பிறகு, வாதி மற்றும் அவரது தாயாருக்கும், சகோதரிக்கும் இடையே ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டில் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை வாதிக்கு மட்டுமே பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான்.

4. எனது தகப்பனார் யாரிடமிருந்து 28–1/2 செண்ட் சொத்தை கிரையம்

வாங்கியதாக சொல்கிறேன் என்றால், முருகேச ரெட்டி, ஜெயராம ரெட்டி, பலராமன், கோதண்டன், பாபு ஆகியோர்களிடமிருந்து 1986–ம் ஆண்டு பி.வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் வாங்கினார்.

5. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 28–1/2 செண்ட் மற்றும் 21 செண்ட் என இரண்டு அயிட்ட சொத்துக்களை வாங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த இரண்டு அயிட்ட சொத்துக்களும் ஒரே சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களாக அல்லது வெவ்வேறு சர்வே எண்களில் உள்ள சொத்துக்களா என்றால், இரண்டு சொத்துக்களும் ஒரே சர்வே எண்ணில் வாங்கப்பட்டது. அந்த ஒரே சர்வே எண் என்பது பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 501/14 என உள்ளது என்றால், சரிதான்.

6. இவ்வழக்கின் பதிலுரையிலும் சர்வே எண் 501/14–ல் உள்ள சொத்தை தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் எனது தகப்பனார் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேனா என்றால், ஆமாம். எங்கள் பதிலுரையில், அந்த சர்வே எண் தவறாக சொல்லி கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். எந்த சர்வே எண்ணிற்கு பதிலாக சர்வே எண் 501/14–ஐ குறிப்பிட்டு கிரையம் வாங்கியதாக சொல்கிறேன் என்றால், சர்வே எண் 502/1–க்கு பதிலாக 501/14–ஐ குறிப்பிட்டு வாங்கப்பட்டது.

7. எனது பதிலுரையில் சர்வே எண் மட்டும் தான் தவறாக சொல்லப்பட்டதாக சொல்கிறேனா என்றால், ஆமாம். செக்குபந்திகள் சரியாக உள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால், செக்குபந்திகள் சரியாக தான் உள்ளது.

8. சர்வே எண் 501/14–ன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.27 செண்ட் என்றால், சரிதான். சர்வே எண் 502–ன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 0.48 செண்ட் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கிரையம் பெற்ற 28–1/2 செண்ட் சொத்தின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.27 செண்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கிரையம்

பெற்ற 28–1/2 செண்ட் சொத்தின் சர்வே எண் 502 என சொல்வது உண்மை என்றால், அந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் 48 என மட்டும் தான் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும், ஆனால் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.27 செண்டில் இருந்து கிரையம் வாங்கியதால் தான், அந்த சொத்தின் சர்வே எண் 501/14 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அந்த இடத்தை எனது அப்பாவிற்கு வாங்கிக் கொடுத்ததே வாதி தான், அதனால் அந்த விவரம் பற்றி எனக்கு முழுமையாக தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வாதி தான் மேற்படி சொத்தை எனது அப்பாவிற்கு வாங்கி கொடுத்தார் என சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

9. பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில், 2–வது அயிட்ட சொத்தாக உள்ள 21 செண்ட் சொத்துக்கான சர்வே எண்ணை குறிப்பிடும் போது, 'மேற்படி எண்ணில்' என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த 21 செண்ட் சொத்து சம்மந்தமாக எங்களுக்கும், வாதிக்கும் இடையே அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 122/2020 என்ற வழக்கு தீர்ப்புக்காக நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். அந்த 21 செண்ட் சொத்தின் சர்வே எண் 501/14D என்றால், சரிதான். மேற்படி வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால், சரிதான், எனது மற்றொரு சகோதரர் பழனி என்பவர் தான் சாட்சியம் அளித்தார்.

10. மேற்படி அசல் வழக்கு 122/2020 வழக்கில் எனது சகோதரர் பழனி சாட்சியம் அளித்த போது நான் உடனிருந்து கவனித்துக் கொண்டிருந்தேன் என்றால், சரிதான். அப்போது எனது சகோதரர் பழனி, எனது தகப்பனார் இரண்டு அயிட்ட சொத்துக்களையும் சர்வே எண் 501/14–ல் தான் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளார் என்றால், சரிதான். அந்த சாட்சியத்திற்கு முரணாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என நான் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

11. பி.வா.சா.ஆ.1 கிரையத்திற்கு முன்பே வாதியின் தகப்பனார் தாவா எ–அட்டவணை சொத்தை கிரையம் பெற்றுவிட்டார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. எனது பதிலுரையிலும் அந்த சொத்தை வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற விவரம் தெரியாது என தான் சொல்லியுள்ளேனா என்றால், ஆமாம். நான் சொல்வது பொய் என்றும், எனது பதிலுரையில், வாதியின் தகப்பனார் 20 செண்ட் சொத்திற்கு பதிலாக கூடுதலாக கிரையம் வாங்கியதாக சொல்லிவிட்டு தற்போது அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

12. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள செக்குபந்திகளை நான் படித்து பார்த்தேனா என்றால், படித்து பார்த்தேன். அந்த ஆவணத்தில் உள்ள 1–வது அயிட்ட சொத்திற்கு செக்குபந்தியாக கிருஷ்ணா ரெட்டி சொத்திற்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனவே, பி.வா.சா.ஆ.1 கிரையத்திற்கு முன்பே வாதி கிரையம் பெற்ற சொத்து தெற்கு பக்கம் இருந்தது என்றால், சரிதான். எனவே, வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற விவரமே தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

13. பி.வா.சா.ஆ.1 கிரையத்திற்கு முன்பு எனது தகப்பனார் வில்லங்க சான்று எதுவும் வாங்கி பார்த்தாரா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது, விற்பனை செய்தவர்கள் அனுபவத்தில் இருந்த சொத்தை தான் எனது தகப்பனார் கிரையம் பெற்றார்.

14. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 1–வது அயிட்ட சொத்தின் சர்வே எண் தவறாக எழுதப்பட்டுவிட்டது என்ற விவரம் என் தகப்பனாருக்கோ அல்லது அவரது காலத்திற்கு பிறகு எங்களுக்கோ எப்போது தெரிய வந்தது என்றால், எனது தகப்பனாருக்கு அவரது காலம் வரை தெரியவில்லை, அவரது காலத்திற்கு பிறகு 2006–ம் ஆண்டு எங்களுக்கு தெரிய வந்தது. அதுபோல் சர்வே எண்

தவறாக குறிப்பிடப்பட்டுவிட்டது என்பதால், பிழை திருத்தல் பத்திரம் எழுதி தர வேண்டும் என இன்றைய தேதி வரையில் எனது தகப்பனாரின் கிரையதாரர்களை அணுகி கேட்டோமா என்றால், கிரையம் செய்தவர்களில் 3 பேர் காலமாகிவிட்டார்கள், மற்றவர்கள் பிழை திருத்தல் பத்திரம் எழுதி தரவில்லை. காலமான 3 கிரையதாரர்களின் வாரிசுகளை சந்தித்து பிழை திருத்தல் பத்திரம் எழுதி தர கேட்டேனா என்றால், கேட்டேன்.

15. 2006-ம் ஆண்டு அதுபோல் சர்வே எண் தவறாக எழுதப்பட்டுவிட்டது என்ற விவரம் தெரிந்த பிறகு, முதன்முதலாக எப்போது எனது தகப்பனாரின் கிரையதாரர்களிடம் பிழை திருத்தல் பத்திரம் எழுதி தருமாறு கேட்டேன் என்றால், 2006-ம் ஆண்டே கேட்டேன். அதுபோல் கேட்டும் பிழை திருத்தல் பத்திரம் எழுதி தராததால் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு எதுவும் அனுப்பினோமா என்றால், இல்லை. அதுபோல் 2006-ம் ஆண்டில் இருந்து பிழை திருத்தல் பத்திரம் எழுதி தர கேட்டு வந்தோம் என்ற விவரத்தை எனது பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending time :11.42 A.M.

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.02.17 17:00:18 +0530